10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 279 செவ்வாய்க்கிழமை 27 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## ஊழலை விசாரிக்கக் குழு

கொழும்பு, பெப்.27,

சட்டம் ஒழுங்கு அமைச்சராகப் பதவியேற்ற கையோடு ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழுவைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, டி.எம்.சுவாமிநாதன், அஜித் பி பெரேரா ஆகியோர் கொண்ட குழுவே நியமிக்கப்பட்டுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளரே இக்குழுவின் செயலாளராகவும் கடமையாற்றுவார். சட்டம் மற்றும் 06▶

## சட்ட அமைச்சராக பொன்சேகா?



கொழும்பு, பெப்.27,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்காலிகமாகவே சட்டம், ஒழுங்கு அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். அவர் தனது பொறுப்பை விரைவில் சரத் பொன்சேகாவிடம் வழ்ங்குவார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அடுத்த வாரம் இடம்பெறும் இரண்டாவது அமைச்சரவை மாற்றத்தின்போது சட்டம் ஒழுங்கு அமைச்சராக சரத் பொன்சேகா பொறுப்பேற்பார் என்று தெரிவித்தார். 06▶

## ஜெனிவா கூட்டம் நேற்று ஆரம்பம்

ஜெனிவா, பெப். 27

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37ஆவது கூட்டத்தொடர், ஜெனிவா நகரில் நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் மார்ச் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த கூட்டத் தொடரில், மார்ச் 21ஆம் திகதி இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா உறுப்பு நாடுகள், சர்வதேச அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் நான்கு வாரங்களுக்கு கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. 06▶

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக சர்வதேச புத்த பிக்குகள் வேண்டுதல்




கிளிநொச்சி, பெப். 27

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மீண்டும் அவர்களின் உறவுகளுடன் சேர வேண்டும் எனப் பிரார்த்திப்போம் என ஜப்பான், அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பௌத்த துறவிகள் தெரிவித்தனர்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழிபாட்டு ஊர்வலம் மேற்கொள்ளும் குழு நேற்று கிளிநொச்சி வந்தது. கந்தசுவாமி கோயில் முன்றலில் தமது உறவுகளை மீட்டுத் தரக் கோரி ஒரு வருடத்துக்கும் மேலாகத் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சந்தித்தனர்.

அம்மக்களுக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்ட இந்தப் பௌத்த பிக்குகள், 06▶

## பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை





கொழும்பு, பெப்ரவரி 27

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவேன் என ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார கூறியுள்ளார். 06▶

## வடக்கில் 500 ஏக்கர் விடுவிக்கப்படும்



கொழும்பு, பெப்.27,

வடக்கில் இராணுவத்தின் வசமிருக்கும் பொதுமக்களின் காணிகளில், 500 ஏக்கர் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என இராணுவத்தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வி 06▶



சிரியாவில் புரட்சியாளர்களின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இராணுவத்தினர் இரசாயன ஆயுதத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் அரசை நிறுத்த செயற்படுங்கள்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு



யாழ்ப்பாணம், பெப். 27

போர்க் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் தொடர்பில் இலங்கையைப் பொறுப்புக்கூற செய்வதற்கான செயற்பாடுகளைத் தமிழ்த் தரப்புகள் முன்னெடுக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஆனால் இதைச் செய்யாமல் அது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 'மாற்று வழிகளே இல்லை 06▶

### சர்வதேச விசாரணையைக் கோரி

## கையெழுத்துப் போராட்டம் யாழில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், 27

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை அரசைப் பாரப்படுத்தி , சர்வதேச குற்றவியல் பொறிமுறையைக் கோரும் கையெழுத்துப் போராட்டம் நேற்று மாலை ஆரம்பமானது.

'சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழு'வின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமான 06▶



### புளொட்டிடம் மீட்டவை

## இராணுவத்தின் ஆயுதங்களே

யாழ்ப்பாணம், பெப்.27

புளொட்டின் முன்னாள் உறுப்பினரிடம் மீட்கப்பட்ட ஆயுதங்கள் இராணுவத்தினுடையதே என இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. ஆனால் அவை காணாமல் போயிருந்தன என்றும் அது குறிப்பிட்டுள்ளது. 06▶

காவியன்


இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற கோசங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழர்கள் தொடர்ச்சியாக சாத்வீகப் போராட்டங்களை நடத்தி வருகின்ற நிலையில் வருடா வருடம் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு நேற்றும் ஆரம்பமாகியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒட்டுமொத்த தமிழர்களும் எவ்வாறு செயற்பட வேண்டும்? போர்க் குற்ற விசாரணை தொடர்பில் ஐ.நாவுக்கு எவ்வாறான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை தமிழர்களை விழிப்பூட்டுவதே இந்தப் பத்தியின் நோக்கம்.





# சர்வதேச விசாரணையே வேண்டும்



தமிழர்களின் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்த அரசுக்கு எந்தவிதச் சிக்கலும் இல்லாதபோதிலும், அரசியல் தீர்வு மற்றும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் போன்றவை இந்த அரசால் இலகுவாகக் கையாளக்கூடியவை அல்ல.

இந்த இரண்டு விடயங்களும் சிங்கள மக்களுடன் நேரடியாகத் தொடர்புபடுவதால் அரசால் அவற்றை விரும்பியவாறு தீர்த்து வைக்க முடியாது. அதிலும், யுத்தக் . குற்றச்சாட்டு விவகாரம்தாம் மிகவும் சிக்கலானது.

இதன் அடிப்படையில் படையினர் தண்டிக்கப்பட்டால் அது அரசின் காட்டிக் கொடுப்பாகவே சிங்கள மக்களாலும் இராணுவத்தாலும் பார்க்கப்படும். அது அரசின் இருப்புக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும். யுத்த களத்தில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களையும் யுத்த செயற்பாடாகப் பார்க்கின்ற கலாசாரம் நாட்டில் ஆழமாக நிலைத்து நிற்பதே இதற்குக் காரணம்.

இந்தப் பிழையான கலாசாரத்தை இன்று மகிந்த தரப்பினர் அவர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். எல்லாத் தரப்புகளினதும் உயிரிழப்புகள், சொத்தழிவுகள் என்பன சேர்ந்துதான் யுத்தம். அவ்வாறான செயற்பாடுகள் இருந்திராவிட்டால் யுத்தத்தை வென்றிருக்க முடியாது என்றொரு போலி நியாயத்தை இவார்கள் சிங்கள மக்கள் முன் வைத்து வருகின்றனர்.

ஆகவே, யுத்தக் குற்றங்களுக்காக படையினர் தண்டிக்கப்பட்டால் புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்தமைக்காகவே தண்டிக்கப்படுகின்றனர் என்ற கருத்து சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படும். இதன் காரணமாகத்தான் அரசு யுத்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்து மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என அவற்றை அழைக்கின்றது.

இந்த யுத்தக் குற்றச்சாட்டு விவகாரம் தமிழருக்கு திருப்திகரமான அளவு நீதியைப் பெற்றுக் கொடுக்கைவிட்டாலும் பரவாயில்லை சிங்கள மக்களுக்கும் படையினருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும். இல்லாவிட்டால் அரசின் இருப்பு சிக்கலாகிவிடும் என்று அரசு கருதுகிறது.

இதனால்தான் யுத்தம் என்ற சொல்லை இதனுடன் கலக்காது இந்த விசாரணையை முன்னெடுக்க அரசு முயற்சிக்கின்றது. அரசின் இந்த இராஜதந்திர நகர்வுக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையும் மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்கி வருவதை அண்மையில் இலங்கை வந்திருந்த மனித உரிமைகள் ஆணையாளரின் கூற்று தெளிவுபடுத்துகின்றது.

மனித உரிமைகள் ஆணையாளர் செய்யட் அல் – ஹுசைன் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணையை நிராகரித்து உள்ளகப் பொறிமுறையின் விசாரணையை ஏற்றுக் கொண்டமையும் யுத்தக் குற்ற விசாரணைகளை நிராகரித்து மனித உரிமை மீறல் பதத்தை மாத்திரம் ஏற்றுக் கொண்டமையையும் நாம் அறிவோம். சர்வதேச விசாரணையை அவர் முழுமையாக நிராகரித்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் பேரவை மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் கூறியபோதிலும், ஆட்சி மாற்றத்தின் பின் அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது. உள்ளகப் பொறிமுறையைக் காட்டியே இந்த அரசு ஐ.நாவின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அரசின் இந்த இராஜதந்திரத்தின் முதற்கட்ட நகர்வு வெற்றி பெற்றுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

மனித உரிமை ஆணையாளரின் இந்த நிலைப்பாடு தமிழருக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. யுத்தக் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன என்று உறுதியாக கூறும் தமிழர் தரப்பு அது தொடர்பில் சர்வதேச விசாரணை

(05ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி Ethiroli
செவ்வாய், 27 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

## ஒரு கண்ணில் வெண்ணெய் மறுகண்ணில் சுண்ணாம்பு

இந்த முறை உள்ளூராட்சித் தேர்தல், தென்னிலங்கைக்கு மாத்திரமல்ல, தமிழர் பகுதியிலும் ஒரு காத்திரமான பாடத்தைச் சொல்லியிருந்தது. இனியும் பிளவுற்று நிற்காமல், தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் யாவும் ஒரே அணியில் இணைய வேண்டும் என்பதே அந்தச் செய்தி. அப்படி நடந்தால், தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகள், இனிமேல் தலையெடுக்க முடியாதபடி செய்யவும் முடியும்.

ஒரே கொள்கை இருந்தாலும், வீடு, சைக்கிள், சூரியன் என்று பிரிந்து நின்றதாலேயே சில இடங்களில் தென்னிலங்கைப் பேரினக் கட்சிகளும், தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகளும் ஆசனங்களைக் கைப்பற்றி, குறித்த சபைகளில் கிடைக்க வேண்டிய பெரும்பான்மை பலத்தைக் கேள்வியாக்கி விட்டன. அதிலும் குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்க வேண்டிய பெரும்பான்மைப் பலமே இவ்வாறு கை நழுவிப் போயிருந்தது. எனவே இந்தத் தேர்தலுக்குப் பின்னானவது கூட்டமைப்புத் தன்னுடைய தோல்விக்கான தவறுகள் எங்கே நிகழ்ந்தன என்று கண்டுபிடிப்பதோடு, ஏனைய தமிழ்க் கட்சிகளோடு இதுவரை காட்டி வந்த வன்மைத்தை விடுத்து சிநேகபூர்வமாக நடந்து கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், என்னதான் நடந்தாலும், அதே அழிவுப் பாதையில் தான் பயணிப்போம் எனக் கூட்டமைப்புக் கங்கணம் கட்டிக் கொண்டே தொடர்ந்தும் தன்னுடைய பயணத்தைத் தொடர்கின்றது. கொழும்பில் நடந்த மத்திய குழுக் கூட்டத்தில், தமிழரசுக் கட்சியின் முன்னாள் இளைஞரணிச் செயலாளர் சிவகரனும், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனும் கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பின் முடிவுக்கு மாறாக , மைத்திரிக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கோரியமையே இந்தக் கட்சியை விட்டு நீக்கும் முடிவுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

குறித்த இருவரும், கட்சியின் முடிவை மீறிச் செயற்பட்டமை உண்மைதான் எனினும் அப்படி அவர்கள் நடந்து கொண்டமைக்கும் சில காரணங்கள் இருக்கின்றன. அதற்கான விளக்கத்தைக் கோரி, இனிமேல் அவ்வாறான கட்சியின் முடிவை மீறும் செயல்களில் ஈடுபடாதீர்கள் எனப் பிரச்சினையைச் சுமுகமாக முடித்திருக்கலாம். இத்தனைக்கும் மைத்திரி ஒன்றும் கூட்டமைப்பின் தலைவருமல்லர். அவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கோரியதால் ஒருபோதும் கூட்டமைப்பின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படப்போவதில்லை. வாக்கு வங்கியில் சரிவு வந்துவிடப்போவதுமில்லை. எனவே குறித்த இருவரையும் கட்சியில் இருந்தே தூக்குவதென்பது, இந்தக் காரணத்துக்கு அப்பால் இன்னொன்றும் இருப்பதாகவே சொல்கின்றது.

தமிழரசுக் கட்சியின் இளையோரிடத்தே சிவகரனுக்கு இன்றும் கூட, குறிப்பிடத்தக்களவு ஆதரவு உண்டு. அதே போன்றா ஆதரவு, மகளிரிடத்தே அமைச்சர் அனந்திக்கு உண்டு. எனவே மக்கள் ஆதரவு கூடிய எவரையும் தங்கள் பக்கத்தில் வைத்திருப்பது தங்கள் பதவிக் கனவுக்கு வேட்டு வைத்துவிடும் என கூட்டமைப்புக்கு நீண்டகாலமாகவே ஒரு பயம் உண்டு, அந்தப் பயமே, சும்மா ஒரு சாட்டை தூக்கிப் பிடித்து, அவர்கள் இருவரையும் குற்றவாளிகளாக்கி, கட்சியை விட்டே கலைக்கச் செய்கின்றது.


சரி, இவர்கள் கட்சியின் முடிவை மீறியதால் இந்தத் தண்டனை என்று கூட்டமைப்பு சப்பைக்கட்டுக் கட்டலாம். ஆனால், இதே கூட்டமைப்பு சில நாட்களுக்கு முன்னர் வரை எவ்வளவு கேவலமாக விமர்சிக்க முடியுமோ, அந்தளவுக்கு விமர்சித்தவர்களையும், தமிழ்த் தேசியத்தை வேரறுக்கும் கட்சிகளில் இருந்து இனத்தைக் காட்டிக் கொடுக்கும் பணியில் இருந்தவர்களுக்கும் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட வாய்ப்பளித்து, அவர்களுக்கு உள்ளூராட்சி மன்றத் தவிசாளர் பதவிகளையும் கொடுத்து இதே தமிழரசுக் கட்சிதான் அழகு பார்க்கிறது. முல்லைத்தீவு கரைதுரைப்பற்று பிரதேசசபையின் கடைசி இரு வருடங்களுக்கான தவிசாளராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் விஜிந்தன், சில மாதங்களுக்கு முன்னர் வரை ரிஷாட் பதியுதீனின் கட்சியில் இருந்து இனத்தைக் காட்டிக் கொடுத்தவர். தமிழரசுக் கட்சியையும், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனையும் வசைமாரியால் நனைவித்தவர். அப்படிப்பட்டவருக்கு தமிழரசுக் கட்சியில் இடமும் கொடுத்து, பதவியும் கொடுத்திருக்கும் தமிழரசுக் கட்சிதான், மைத்திரிக்கு வாக்களிக்க வேண்டாம் என்ற காரணத்துக்காக அனந்தியையும், சிவகரனையும் கட்சியில் இருந்து தூக்கியிருக்கிறது. ஒரு கண்ணில் வெண்ணெய், மறுகண்ணில் சுண்ணாம்பு.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## சிறுநீரகத் தானத்துக்கு கட்டணம் ஏதுமில்லை

கொழும்பு, பெப்.27

வெளிநாட்டவர்களிடமிருந்து சிறுநீரகங்களைப் பெற்று, இலங்கையில் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு தடைவிதித்துள்ள சுகாதார அமைச்சு, அவ்வாறு சிறுநீரகங்களை பெறுவோர் எந்தவொரு கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை என்றும் சிறுநீரகங்களைத் தானமாகக் கொடுப்பதற்கு முன்வருவோருக்கு, பணம் செலுத்தத் தேவையில்லை என்றும் பணித்துள்ளது.



இந்திய பிரஜைகளால், சிறுநீரகங்கள் வழங்கப்பட்டு, இலங்கையிலுள்ள தனியார் வைத்தியசாலைகளில் சிறுநீரக மாற்று சிகிச்சைகள் செய்யப்படுவதாக, சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகியதையடுத்தே, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

"மனித உறுப்புகளை தானம் செய்தல்" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உறுப்புகளை தானம் செய்வதற்கு முன்வருவோருக்கு, ஒரு நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக கூறிய அவர், அவர்கள், வாழ்க்கை முழுவதும் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

"மனித உறுப்புகளை தானம் செய்வதில், இலங்கை, ஒரு நிலையான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்பதையிட்டு நான் பெருமையடைகின்றேன். எமது நாட்டிலுள்ள அர்ப்பணிப்புமிக்க, உயர் தொழில் முறை வைத்தியர்கள், சிறுநீரகங்கள், இருதயங்கள் மற்றும் பிற உறுப்பு மாற்று சிகிச்சைகளை, குறைந்த சலுகைகளுடன், மிகவும் வெற்றிகரமான முறையில் செய்து முடித்துள்ளனர்" என்று அவர் மேலும் கூறினார். (அ)

## அமைச்சர்களுக்கு பாதுகாப்பு நீக்கம்

கொழும்பு, பெப்.27

அமைச்சர்கள் சிலருக்கு வழங்கப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியில் அமைச்சர்களான திகாம்பரம், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் விசேட பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சர் சாகல ரத்னாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் பியசேன கமகே ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் விசேட பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மறுசீரமைப்பை விமர்சிக்கும் மகிந்த



கொழும்பு, பெப்.27

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கை என்பது தலைவலிக்குத் தலையணையை மாற்றுவதைப் போன்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

"அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காத அமைச்சர்கள் பலரை மாற்றினாலும், அரசாங்கத்தின் சுயரூபம் என்னவென்பதை மக்கள் நன்கு அறிந்தே வைத்துள்ளனர்: இந்த அமைச்சர்களின் மாற்றத்துடனாவது மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதைத்தான் இந்த அரசாங்கம் செய்ய வேண்டியுள்ளது. இந்த அமைச்சரவை மாற்றத்தினூடாக மக்களுக்கு சேவை செய்யும் விதம் குறித்து நாம் அவதானித்துக் கொண்டே உள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## மத்தளவில் தமக்கும் பங்கு: கேட்கிறது விமானப்படை

கொழும்பு, பெப்.27

மத்தல விமான நிலையத்தை அவசர தேவைகளுக்கும், தேசிய பாதுகாப்புத் தேவைகளுக்கும் பயன்படுத்துவதற்கான உரிமையையும், விமான நிலையத்தின் ஒரு பகுதி நிலத்தையும் தமக்கு வழங்க வேண்டும் என்று விமானப்படை கோரிக்கை விடுத்துள்ளது.

மத்தள விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விமானப்படை இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

அவசரத் தேவைகளின் போதும், தேசிய பாதுகாப்பு பயன்பாடுகளுக்காகவும், மத்தள அனைத்துலக விமான நிலையத்தின் ஒரு ஓடுபாதைதையைப் பயன்படுத்துவதற்கு தமக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்று விமானப்படை கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், தேவைப்பட்டால் இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கென, விமான நிலையத்தின் ஒரு பகுதி நிலத்தையும் தமக்கு ஒதுக்கித் தருமாறும் விமானப்படை கோரியுள்ளது.

தேசிய பாதுகாப்பு நலன்களைக் காரணம் காட்டி சிறிலங்கா விமானப்படை மத்தள விமான நிலையத்தின் ஓடுபாதை மற்றும் நிலம் என்பனவற்றைப் பயன்படுத்த அனுமதி கோரியிருப்பதாக, சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நிமலசிறி தெரிவித்துள்ளார். (அ)

## செயற்கை மழையே மெத்தப் பெய்!

கொழும்பு, பெப்.27

புதிதாக செயற்கை மழையை பொழிய வைப்பதற்கான திணைக்களம் ஒன்றை சக்தி, மின்சக்தி அமைச்சு உருவாக்கவுள்ளது. சக்தி, மின்சக்தி பிரதி அமைச்சராக இருந்த அஜித் பெரேராவை மேற்கொள்காட்டி கொழும்பு ஆங்கில வாரஇதழ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நீர்மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தைப் பேணுவதற்காகவும், வறட்சியின் போது விவசாயத்துறைக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகவுமே இந்தச் செயற்கை மழைக்கான திணைக்களம் உருவாக்கப்படவுள்ளது.

விமானப்படை, வளிமண்டலவியல் திணைக்களம், மின்சார சபை, நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அதிகாரசபை ஆகியவற்றின் அதிகாரிகள் அடுத்த மாதம் தாய்லாந்துக்குச் சென்று, செயற்கை மழையை பொழிவிப்பது தொடர்பான பயிற்சிகளைப் பெறவுள்ளனர்.

"ஆண்டுக்கு சராசரி 2000 மி.மீ மழைவீழ்ச்சி நீர் மின் உற்பத்திக்கு போதுமானதாக இல்லை. எங்களுக்கு அதிக மழை தேவை. எனவே தான் செயற்கை மழையை உருவாக்குவதற்கான வாய்ப்பை ஆராய்கிறோம்" என்று மின்சார சபை பணிப்பாளர் சுலக்சன ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் போதுமான மழை பெய்யாததால், பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் அதன் கொள்ளளவில் அரைப்பகுதியே நிரம்பியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீர்மின் உற்பத்தி பாதிக்கப்பட்டால், அனல் மின்சாரத்தில் தங்கியிருக்க வேண்டியிருக்கும். அதற்கு செலவு அதிகம். அனல்மின்சாரத்தை தனியாரிடம் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். எனவே தான் செயற்கை மழையை பொழிவிப்பதற்காக தாய்லாந்தின் உதவியை கோரியுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அலகு ஒன்றுக்கு 2 ரூபாவே செலவு ஏற்படும் என்றும் அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஒரு அலகிற்கு 25 ரூபா செலவு ஏற்படும் என்றும் சிறிலங்கா மின்சார சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

1980களில் செயற்கை மழையை பொழிவிக்கும் செயற்பாடுகள் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்டன. அது வெற்றிகரமாக அமைந்தது.

இப்போது இதற்கான முதற்கட்ட சாத்திய ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன. அடுத்து இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான குழு அமைக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.(அ)

## இன்று நாளும் கோளும்

27.02.2018 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 15 ஆம் நாள்

துவாதசி பி.ப 12.56 | பூசம் பகல் 02.35 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 03.00 – 04.30 | சுபநேரம் காலை 07.30 – 08.30 | எமகண்டம் பி.ப. 09.00 – 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | உயர்வு | நலம் | வெற்றி | கவலை | நட்டம் | சிக்கல் | சிந்தனை | ஆர்வம் | மேன்மை | ஆதரவு | பெருமை |

# மாற்றங்கள் தொடரும் மைத்திரி விடாப்பிடி



கொழும்பு, பெப்.27

நாட்டு மக்களிடமிருந்து கிடைத்த செய்திக்கு ஏற்ப அரசாங்க நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமென தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் மேற்கொள்ள வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுப்படும் என்றும் கூறினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில், இரண்டாவது மாற்றம் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அங்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"சில அமைச்சுகளின் விடயப்பரப்புகள் எதிர்காலத்தில் திருத்தப்பட்டு மிகவும் பொருத்தமான நிறுவனங்களின் கீழ் கொண்டுவர எதிர்பார்த்துள்ளோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்மைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களின் மறுசீமைப்பு எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதியில் மேற்கொள்வோம். அரசாங்க கூட்டுத்தாபனம், சட்டவாக்க சபைகளின் நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க வகையில் மேற்கொள்வதற்கு தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

நாட்டு மக்களிடமிருந்து கிடைத்திருக்கும் செய்திக்கு ஏற்ப அரசாங்க நடவடிக்கைகளில் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு, நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் மேற்கொள்ள வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்போம்" என்றார் மைத்திரி. (அ)


# போதைப் பயிற்றுநருக்கு அனுமதிப் பத்திரம் ரத்து

வடமராட்சி, பெப்.27

போதையோடு சாரதியப் பயிற்சி வழங்கியவரின் பயிற்றுநர் அனுமதிப்பத்திரம் ஆறுமாதத்துக்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நெல்லியடி நகரப்பகுதியில் குறித்த நபர், குடிபோதையுடன் சாரதியப் பயிற்சி வழங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த பொலிஸார், அவரைக் கைது செய்து, பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர். அதன் போது சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை கடந்த 23 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மதுபோதையோடு சாரதியப் பயிற்சி வழங்கிய நபருக்கு பத்தாயிரம் ரூபா அபராதமும், அவரது சாரதியப் பயிற்றுநருக்கான அனுமதிப்பத்திரத்துக்கு 6 மாத காலத் தடையும் நீதிபதியால் விதிக்கப்பட்டது. (அ-11)



# பிரமந்தனாறில் வெளிநோயாளர் பிரிவு திறப்பு

கிளிநொச்சி, பெப்.27

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் ஆரம்ப மருத்துவ வெளிநோயாளர் நிலையத்தின் புதிய கட்டடம் வட மாகாண சுகாதார அமைச்சர் க.குணசீலனால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரமந்தனாறு, புன்னைநீராவி, கண்ணகிபுரம் ஆகிய பகுதிகளில் நோயாளர்கள் பயன்பெறும் பொருட்டு வடமாகாண சுகாதார அமைச்சினால் சுமார் 2 கோடி ரூபா செலவில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடமாகாண பிராந்திய சுகாதார பணிப்பாளர், வடமாகாண சபை உறுப்பினர்கள், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் குமாரவேல், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் மைதிலி மற்றும் சுகாதார ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள். (அ)

# அமைச்சருக்கு வந்த கோபம்



கொழும்பு, பெப்.27

புதிய அமைச்சரவை மாற்றத்தின் போது, சிறைச்சாலைகள் "மறுசீரமைப்பு, போதைப்பொருள் ஒழிப்பு, சமூக மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட அஜித் பி.பெரேரா, ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்காது, கோபமாக சென்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரதியமைச்சரான அவருக்கு, இராஜாங்க அமைச்சர் பதவியே நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிப்பாரென, ஊடகவியலாளர்கள் எதிர்பார்த்திருந்த போதிலும், தன்னுடைய வாகனத்தின் கண்ணாடியை கூட இறக்கமால், மிகவேகமாகச் சென்றுவிட்டார். அவருடைய முகத்தில் சந்தோஷத்தைக் காணக் கிடைக்கவில்லை.

இதனிடையே கருத்துரைத்த சமூக வலுவூட்டல், நலம் மற்றும் கண்டிய பாரம்பரிய பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, "உங்களிடம் கோபம் கொள்வதில் என்ன பிரயோசனம் இருக்கிறது" எனக் கேட்டார். (அ)

# குடிசை கட்டுவது எப்போது?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மேடைகளில் பேசப்பட்ட – பரிமாறப்பட்ட –சுவாரசியமான விடயங்கள் பல.அவற்றுள் இங்கு நாம் சொல்லப் போகும் விடயமும் ஒன்று.

தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கட்சிகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்குவதும் ஒருவர்மீது ஒருவர் குற்றஞ்சாட்டுவதும் மக்களின் அனுதாபங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் செயற்படுவதும் தேர்தல் காலங்களில் பொதுவானவை.

அந்த வகையில், மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் நகர சபைக்கு தராசுச் சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு தலைமை தாங்கிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான அலி சாஹிர் மௌலானா, தான் ஓர் ஏழைபோல் நடித்து–மக்களின் அனுதாபங்களை திரட்டியே வாக்குகளை சேகரிக்க முயற்சி செய்தார்.

அவர் எடுத்துக்கொண்ட அனுதாபத் தலைப்பு அவரது சொந்த ஊரான ஏறாவூரில் அவருக்குச் சொந்தமாக ஒரு வீடு இல்லாமைதான். இப்போது தான் அவர் ஏறாவூரில் காணி ஒன்றை வாங்கிப் போட்டிருப்பதாகவும் விரைவில் அதில் குடிசை ஒன்றை அமைத்துக்கொண்டு குடியேறுவார் என்றும் ஒரு மேடையில் மௌலானா கூறிவிட்டார்.

ஆனால்,அவரது மனைவி நடத்துகின்ற சர்வதேசப் பாடசாலையால் ஒரு மாதத்துக்கு சுமார் 20 லட்சம் ரூபா வரை வருமானம் கிடைக்கிறது என்று இன்னொரு மேடையில் கூறினார்.

அவ்வளவுதான் அவரது அரசியல் எதிரியான கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் ஹாபீஸ் நஸீர் அஹம்மட் இதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

"20 இலட்சம் ரூபா மாதாந்த வருமானம் என்றால் குடிசையா கட்டுவார்?" என்று கேட்டு கிண்டல் செய்யத் தொடங்கினார். அதுமட்டுமல்ல. கொழும்பில் மௌலானாவுக்கு சொந்தமாக இருக்கின்ற வீட்டினதும் அவர்,அவரது மனைவி, பிள்ளைகள் பாவிக்கின்ற வாகனங்களினதும் விபரங்களையும் அம்பலப்படுத்திவிட்டார்.

சொத்துக்களை மறைத்து ஏழைபோல் நடிக்கப் போய் வசமாக மாட்டிக்கொண்டார் மௌலானா. தேர்தல் முடிந்த பின்பும் மக்கள் அவர் கூறியதை மறப்பதாக இல்லை. குடிசை அமைப்பது எப்போது என்று இப்போதும் ஊர் மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.





# வவுனியா செயலகத்தில் விரைவில் விகாரை?






கொழும்பு, பெப்.27

வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் பௌத்த விகாரை ஒன்றினை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா, தமிழ் பேசும் மக்களை அதிகமாகக் கொண்ட ஒரு மாவட்டமாகும். தற்போது பல திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் இடம்பெற்றுள்ள நிலையில், மாவட்ட செயலக வளாகத்திலும் விகாரை ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான வேலைகள் புதிதாக வவுனியா மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர் சோமரட்ன விதான தலைமையில் இரகசியமாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் அதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெறவுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இதேவேளை, வடக்கில் 1000 பௌத்த விகாரைகளை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வவுனியாவில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அமைச்சரவை மாற்றம் ஐ.தே.க புகைச்சல்



கொழும்பு, பெப்.27

அமைச்சரவையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் புகைச்சல் எழுந்துள்ளது.

எட்டு அமைச்சர்கள், மூன்று இராஜாங்க அமைச்சர், ஒரு பிரதி அமைச்சர் ஆகியோர் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றனர். இவர்களில் 11 பேர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களாவர்.

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் அமைச்சரவையில் பெரியளவிலான மாற்றங்கள் செய்யப்படும் என்றும், மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் நடந்த சிறியளவிலான அமைச்சரவை மாற்றம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சரவை மாற்ற நிகழ்வு முடிந்து வெளியே வந்த இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க இதனை ஒரு நகைச்சுவை நாடகம் என்றும், இதன் அடுத்த பகுதி விரைவில் அரங்கேறும் என்றும் கூறியிருந்தார்.

அதேவேளை, ஐதேகவின் மற்றொரு முக்கிய தலைவரான முன்னாள் நிதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் இதனை விமர்சித்துள்ளார்.

"மக்கள் எதிர்பார்க்கும் அமைச்சரவை மாற்றம் சில ஐதேக அமைச்சர்களை மாற்றுவது அல்ல. இது ஒரு நகைச்சுவை, கண் துடைப்பு. மக்களின் எதிர்பார்ப்புகள் கருத்தில் கொள்ளப்பட்டு, அது அமைச்சரவை மாற்றத்தில் பிரதிபலிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். (அ)

# சர்வதேச விசாரணையே வேண்டும்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று இடம்பெற்றால் மாத்திரமே உண்மைகள் வெளிப்படும் என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் என்றும் நம்புகிறது.

உள்ளகப் பொறிமுறையின் மீது அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை என்பது அவர்களது பிரதிநிதிகள் மூலம் வெளிப்படும் வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன. சர்வதேச விசாரணை என்பதே தமிழர்களின் நிலையான கோரிக்கையாக இருக்கின்றது.

ஆனால், மனித உரிமைகள் ஆணையாளரோ இந்த விவகாரத்தை இலங்கை அரசின் உள்ளகப் பொறி முறையிடம் ஒப்டைத்துவிட்டுக் கழன்று விட்டார். விசாரணையின் முடிவில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவை யுத்தக் குற்றங்களா இல்லையா என்று தீர்மானிக்கும் அதிகாரத்தைக்கூட இலங்கையிடம்தான் விட்டுள்ளார்.

சிங்கள மக்களை – இராணுவத்தினரைப் பகைத்துக் கொள்ள விரும்பாத அரசு கண்டுபிடிக்கப்படும் குற்றங்களை யுத்தக் குற்றங்களாக ஏற்றுக்கொள்ளமாட்டாது. விசாரணைக்கு முன்பாகவே அரசு யுத்தக் குற்றங்களை நிராகரித்துள்ளது. ஆகவே,மனித உரிமைகள் மீறல் என்ற கோணத்தில்தான் உள்ளகப் பொறிமுறை விசாரணையை அரசு மேற்கொள்ளும். இது எவ்வாறு தமிழருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும்?

இந்த நியாயமான வாதத்தை ஐ.நா தமிழர்கள் பக்கம் இருந்து சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதே தமிழர்களின் கோரிக்கையாக இருக்கின்றது. குற்றங்களை நிராகரித்துவிட்டே குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தினால் எப்படிக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்படும் என்பது தமிழர்களின் கேள்வியாக இருக்கின்றது.

இதனால்தான் அவர்கள் நடுநிலையான விசாரணையைக் கோருகின்றனர். அந்த நடுநிலையான விசாரணையை ஐ.நாவால்–சர்வதேசத்தால் –மாத்திரமே நடத்த முடியும் என தமிழர்கள் நம்புகின்றனர்.

யுத்தக் குற்ற விசாரணை தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளரின் நிலைப்பாட்டை தமிழர்கள் ஏற்றுக் கொண்டு உள்ளகப் பொறிமுறையின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்கப் போகிறார்களா அல்லது சர்வதேச விசாரணைகள் என்ற நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கப் போகிறார்களா என்ற கேள்விக்கு தமிழர்கள் ஒன்றுபட்டு வழங்கும் ஒரே பதில் சர்வதேச விசாரணை என்பதுதான். இது விட்டுக்கொடுப்புகள் எதையும் செய்யமுடியாது.

ஆனால், இது தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்டதால் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுவது சந்தேகமே. ஆனால், அந்த நிலைப்பாட்டை மாற்றி அமைப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு நடவடிக்கைகளை எடுக்குமா அல்லது உள்ளகப் பொறிமுறையின் விசாரணை முடியும்வரை பொறுமையாக இருக்குமா என்பதுதான் தமிழர்களின் கேள்வியாக இருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டம் நேற்று ஆரம்பமாகி உள்ளதால் தமிழர்களின் இந்த நிலைப்பாட்டை ஐ.நாவுக்கு மீண்டும் வெளிப்படுத்த வேண்டிய கடமை எமக்குண்டு. புலம்பெயர் தமிழர்களும் இலங்கையில் வாழும் தமிழர்களும் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டங்களின் ஊடாக இந்தச் செய்தியை ஐ.நாவுக்கு உணரச் செய்ய வேண்டும்.

## அவைக்கு நல்ல புத்தியைக் குடு எண்டு கடவுளை வேண்டினாலே போதுமாம்?

அப்பு எண்ணத்தான் ஞாபகம் வருகிது. அவர் அடிக்கடி சொல்லுறவர் நிண்ட வெள்ளத்தை வந்த வெள்ளம் அடிச்சுக் கொண்டு போறதெண்டு. கான்போனிலை பாத்த நேரம் தொட்டு முதலி ஓயாமல் உதைப் பற்றின கதைதான்.

போராலை பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வமத வழிபாட்டு ஊர்வலம் வந்து – கிளிநொச்சிக் கந்தசுவாமி கோவிலுக்கு முன்னாலை நிக்கிற, இப்ப ஒரு வருசத்துக்கு மேலை சாகக் கிடக்கிற காணாமல் ஆக்கப்பட்ட ஆக்களின்ரை சொந்தக்காரரைச் சந்திச்சுப் பிரார்த்தனை செய்தவையாம். நல்ல காரியந்தான். உவை சாதாரணமான ஆக்கள் இல்லை. சர்வதேசத்தின்ரை முக்கிய பங்காளர்களின்ரை மத குருமார். உவைக்கு இஞ்சை நடந்த நல்லது கெட்டது எண்டு எல்லா விவரங்களும் தெரியும். எல்லா விவரங்களும் தெரிஞ்சு கொண்டுதான் இஞ்சை வந்திருக்கினம். அப்ப உவைக்கும் தெரியிது இனிக் கதைச்சு வேலை இல்லை எண்டு.

அப்ப அவைக்குக் கள்ளன் ஆர் எண்டுந் தெரியும், எப்பிடிக் களவெடுத்தவன் எண்டும் தெரியும். அவன் என்னத்தைக் களவெடுத்தவன் எண்டும் தெரியும். கள்ளனுக்கு அடைக்கலம் குடுத்த ஆக்கள் ஆர் எண்டும் தெரியும். அப்ப அவை செய்ய வேண்டிய வேலையள் எக்கச் சக்கமாக்கிடக்கு. அதை விட்டிட்டு இதென்னெண்டால் களவு குடுத்த ஆக்களிட்டைப் போய் களவெடுத்தவன் ஆரெண்டு கடவுளிட்டைக் கேப்பம் எண்டு சொல்லுறது எவ்வளவுக் கெவ்வளவு சரி எண்டு எனக்குத் தெரியேல்லை எண்டு சொல்லி முதலி கத்திறான்.

முந்தி 1984 இலையும் இலங்கைக்கு வந்து ஒருக்காக் கும்பிட்டிட்டுப் போனவையாம். முதலி சொல்லுறான் அவை வந்து கும்பிட்டிட்டுப் போனாப் பிறகுதான் சண்டை கூடினதாம். இல்லைத் தெரியாமல் தான் கேக்கிறன், வந்தவை போய்த் தங்கடை தங்கடை நாட்டிலை இஞ்சை என்ன நடக்கிதெண்டு உண்மையைத்தன்னும் சொல்லியிருக்க வேணும். அப்பிடிச் சொல்லிச்சினமோ தெரியேல்லை? அப்பிடி விளங்கப்படுத்திச் சொல்லி இருந்தால் முள்ளிவாய்க்காலிலை இலங்கை இராணுவத்தோடை சேந்து அவையின்ரை நாட்டுக்காரர் கச்சேரி வச்சிருக்க மாட்டினம். என்ன?

சண்டை நடக்கிற நாட்களிலை எத்தினை சாமிமார் வந்து தலையாலை குத்தி முறிஞ்சினம். சண்டையை நிப்பாட்டுங்கோ. சமாதானம் வேணும். வீணாச் சனம் சாகிது. எண்டு எத்தினை விறுத்தமாக் கத்தினவை. வாறது, போறது. வந்து அரசாங்கத்திலை உள்ள ஆக்களைச் சந்திக்கிறது. பிறகு அமெரிக்கா, லண்டன் எண்டு எல்லா எம்பசியளுக்கும் போறது. அவயோடையும் இருந்து கதைக்கிறது. அவையிட்டை என்னத்தை வேண்டித் திண்டு குடிச்சாங்களோ தெரியாது? முள்ளிவாய்க்காலிலை பல நாடுகளும் சேந்து அடிச்சுச் சனத்தைச் சாக்காட்டேக்கை முதல் வந்து திரிஞ்ச ஒரு நாயளும் பிறகு வரேல்லை. ஏன்? இண்டைக்கு வரைக்கும் வரேல்லை. இப்ப கொண்டு வந்து இன்ரநஷனல் புத்த சாமிமாரை நீதி கேட்டுப் பேராடுற எங்கடை ஆக்களோடை விட்டுக் கிடக்கு. என்ன கூத்தோ தெரியாது? என்ன? நடக்கப் போகுதோ எண்டும் தெரியாது. உது ஒரு குழப்பிற விளையாட்டெண்டு பேப்பர் கடைச் சனம் சொல்லுது. உது எங்கடை அந்தாளின்ரை நரிக்குணத்திலை ஒண்டாம்.

இனி இஞ்சை வந்து கத்திக் குளறிக் கும்பிட்டுச் சரி வராது. கடவுளும் இனி கேக்கிற மூட்டிலையும் இல்லை. அவருக்கும் எல்லாத்தையும் கேட்டுச் சலிச்சுப் போச்சுது. இனி அவராலை ஒண்டையும் கேக்கேலாது எண்டு ஆனைக்குத்தி ஐயர் சொல்லிறார். அவருக்கும் முறைப்பாடுகள் கூடி பைலுகளும் கூடிப்போச்சாம். இனி ஏதாச்சும் இருந்தால் அப்பொயின்மென்ட் எடுத்துக் கதைக்கலாம் எண்டும் ஐயர் சொன்னவராம். அதாலை ஆரேன் அவையின்ரை பாஷை தெரிஞ்சால் அவையிட்டைச் சொல்லட்டாம் தயவு செய்து குழப்ப வேண்டாமாம். தமிழ்ச் சனத்தின்ரை கோரிக்கையைக் குழப்பிற ஆக்களுக்கும், அவைக்கு ஒண்டையும் குடுக்க விடாமல் பண்ணிற ஆக்களுக்கும் நல்ல புத்தியைக் குடுக்கச் சொல்லி வழிபட்டாலே போதுமாம். பிரச்சினை தானாத் தீருமாம் எண்டு முதலி சொல்லுறான்.

- வில்லங்கம் விநாசி

# ஒரு துண்டுக் காணி கூட கடற்படைக்கு வழங்கோம்

## ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்

முள்ளிவாய்க்காலில் கடற்படை ஆக்கிரமித்து வைத்துள்ள காணிகளில் ஒரு துண்டைத்தானும் அவர்களுக்கு வழங்க மாட்டோம் என மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

நேற்று நடந்த முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.


முள்ளிவாய்க்கால் கிழக்கில், பொது மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியில், கோட்டாபய கடற்படை முகாம் அமைந்துள்ளது. குறித்த காணியை கடற் படையினரின் தேவைக்காக சுவீகரிக்கும் முயற்சிகள் பல தடவைகள் மேற்கொள் ளப்பட்டபோதும், பொதுமக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தது. இந்நிலையில், கடந்த வியாழக் கிழமைஅளவீடு செய்யப்படும் என காணி நில அளவை திணைக்ளத்தினரால் அறிவிக்கப்பட்டமைக்கு அமைய சுவீ கரிப்பை கைவிடுமாறு கோரி பொதுக்கள், காணி உரிமையாளர்கள் முகாமுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், வேறு பாதையூடாக, நில அளவையாளர்கள் இராணுவ முகாமுக்குள் சென்றுவிட்டதாகவும் அவர்கள் வெளியேற வேண்டும் எனவும், நில அளவீட்டை நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்து வட்டுவாகல் பாலத்தை மறித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நில அளவையைக் கைவிடுவதாகவும், முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்படும் எனவும் எழுத்து மூலமாக தெரிவித்தால் மட்டுமே போராட்டம் கைவிடப்படும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், நில அளவை கைவிடப்படுவதாகவும், எதிர்வரும் 26 ஆம் திகதி (நேற்று) இடம்பெறவுள்ள முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்படும் என தெரிவித்து, கரைத்துறைப்பற்று பிரதேச செயலரின் கையொப்பத்துடனான கடிதத்தை மேலதிக அரசாங்க அதிபர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் கையளித்தார்.இதனையடுத்து, மக்கள் போராட்டத்தை கைவிட்டிருந்தனர்.

இந்நிலையில், இன்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் ஆராயப்பட்டு, குறித்த காணிகளை கடற்படைக்கு வழங்க முடியாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## இன்றைய கேலிச்சித்திரம்



## ஆவா குழுத் தலைவரின் நெருங்கிய சகா கைது



மானிப்பாய், பெப்.27,

ஆவா குழுவின் தலைவர் என கூறப்படும் சன்னாவின் நெருங்கிய சகா கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரை ஆணைக்கோட்டைப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள் ளனர். சாவற்கட்டு பகுதியைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல வாள்வெட்டுச் சம்பவங்க ளுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைய இவர் கைது செய் யப்பட்டதாகவும், விசாரணைகளின் பின்னர் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாகவும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள் ளனர். ஆவா குழுவின் தலைவர் எனக் கூறப்படும் 'சன்னா' சிறையிலிருந்து தப்பிச் சென்ற காரணத்தினால் குற்றவாளியாக இனங்காணப்பட்டு அவருக்கு ஒன்றரை வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (இ)

# தொடர்ச்சிகள்

### சட்ட... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அந்தப் பதவி பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவுக்கு அமைச்சுப் பொறுப்பை வழங்க சஜித் பிரேமதாச மற்றும் அஜித் பெரேரா ஆகியோர் எதிர்த்த நிலையிலேயே பெண் நாடாளுமன்ற உறுப்பினரிடம் பதவி வழங்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது. (இ)

### நம்பிக்கையில்லா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தளத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர்கள் சந்திப் பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். "ஐக்கிய தேசியக் கட்சியில் தலைமைத்துவத்தில் மாற்றத்தைக் கொண்டு வராமல் அபிவிருத்தி காணமுடியாது. இதனடிப்படையில் பிரதமருக்கு எதிராக விரைவில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவருவேன்" - என்று அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் வீட்டில் கூடி இரகசியப் பேச்சு நடத்தியுள்ளனர். இந்தப் பேச்சில் ஐ.தே.க. தலைமை மீது அதிருப்தியில் உள்ள விஜயதாஸ ராஜபக்ஷ, வசந்த சேனாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர் எனத் தெரிய வருகின்றது. (ச)

### சர்வதேச... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் 30/01 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மனித உரிமைகள் ஆணையகத்தின் நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என அறிக்கை விட்டுள்ளது. இதன் மூலம் அந்தக் கட்சி பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலிக்க வில்லை - ஒலிக்கப்போவதுமில்லை என்பது தெளிவாகி யுள்ளது. இந்த விடயத்தைப் பாதிக்கப்பட்ட மக்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்' எனக் கூறினார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் அவர் நடத்திய சந்திப்பிலேயே இவற்றைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரே தனது அறிக்கையில் 'இலங்கை அரசைப் போர்க் குற்ற நீதிமன்றில் அல்லது விசேட சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்கள் குரலை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்துக்கு கொண்டு செல்ல வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

ஆனால் தமிழ்தேசிய கூட்டமைப்பு மாற்று வழிகளே இல்லை என கூறிக்கொண்டு 30/01 தீர்மானத்தை அழுத்தம் கொடுக்க வேண்டும் என கூறிவருகின்றது. இதற்காகவே தமிழ்தேசிய மக்கள் முன்னணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் கையொப்பம் பெறும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இதில் கையொப்பமிடுவதன் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களின் குரல் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் கவன்ததை ஈர்க்கவேண்டும் - என்றார். (ச - 24)

### கையெழுத்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டம் வடக்கு, கிழக்கு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொள்ளாது ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட உள்ளக விசாரணைப் பொறி முறை தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை.

2017 இல் மேலும் இரு வருட அவகாசம் வழங்கப் பட்டது. இன்று ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் மிகுதி ஒரு வருடத்தையும் வழங்கி காலத்தை வீணடிக்காது, இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் நிறுத்தும் தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்புச்சபை நிறைவேற்ற வேண்டும் என வலியு றுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்றைய போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார், செயலாளர் செ. கஜேந்திரன் மற்றும் முக்கியஸ்தர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மத குருமார் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கோரிக்கையை வலியுறுத்தும் விதமாகக் கையொப்பமிட் டனர். (ச - 24)

### வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள பொதுமக் களின் காணிகளில் 76 வீதமானவை விடுவிக்கப்பட்டன. இராணுவத்தின்வசமுள்ளகாணிகள்விடுவிக்கப்படவில்லை எனச் சிலர் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக் கின்றனர். இது அடிப்படையற்ற குற்றச்சாட்டாகும். த மது அரசியல் இலாபத்திற்காகவே இவ்வாறான குற்றச்சாட் டுக்களை அவர்கள் முன்வைக்கின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

### ஜெனிவா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கூட்டத் தொடரில், மார்ச் மாதம் 16ஆம் திகதி இலங்கையின் மனித உரிமைகள் விடயம் தொடர்பில் கலந்துரையாடலொன்றும் இடம்பெறவுள்ளது. இதைய டுத்து, மார்ச் மாதம் 21ஆம் திகதி இலங்கை தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளதுடன், அதன் பின்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நேற்று ஆரம்பமான கூட்டத்தொடரில் ஐ.நா செய லாளர்நாயகம்அன்ரோனியோகுட்டரஸ்உரையாற்றினார். மனித உரிமைகளை உறுதிப்படுத்ததுவதற்கு திட சங்கற்பத்துடன் செயற்பட வேண்டும் என அவர் இதன் போது வலியுறுத்தினார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செயிட் அல்ஹூசைனும் மனித உரிமைகளுக்கு மதிப் பளிக்க வேண்டியதன் அவசியத்தை நேற்றைய அமர்வில் சுட்டிக்காட்டினார். (இ)

### இராணுவத்தின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தலைமையகம் வெளியிட்ட இந்த அறிக்கையை யாழ். நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் நேற்றுத் தாக்கல் செய்தனர்.

யாழ். நகரில் புளொட் அமைப்பு பயன்படுத்திய வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் சில கடந்த டிசம்பர் 19 ஆம் திகதி மீட்கப்பட்டது. இது தொடர்பில் அந்த வீட்டில் தங்கியிருந்த சிவகுமார் என்பவர் கைது செய்யப்பட்டார்.

யாழ். நீதிவான் நீதிமன்றின் உத்தரவுப்படி தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவருக்கு எதிரான வழக்கு நேற்று நீதிமன்றில் எடுக்கப்பட்டது. இதன்போதே இராணுத் தலைமையகம் 'அந்த ஆயுதங்கள் இரா ணுவத்துக்கு 1998 ஆம் ஆண்டு வழங்கப்பட்டவை என் றும், அவை காணாமல் போயிருந்தன என்றும் குறிப்பிட் டுள்ளது. (ச)

### ஊழலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கு அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையில் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையா டலைத் தொடர்ந்து இவர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஊழல் மற்றும் மோசடியை கட்டுப்படுத்த இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க சமர்ப்பித்த அறிக்கை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (இ)

### காணாமல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் "ஈடுபடுபவர்களுக்கு ஆசியும் வழங் கினர். இதன்போது 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அவர் களின் உறவுகளுடன் சேரவேண்டும் எனப் பிரார்த்திப் போம்" என்று கூறினர். (ச)

# சிரியாவில் போர் நிறுத்தம் ஐ.நாவில் நிறைவேறியது

நியூயோர்க், பெப். 27

சிரியாவில் 30 நாட்கள் போர் நிறுத்தம் செய்வதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபை ஒப்புதல் வழங்கியது.

சிரியாவில் நடைபெற்றுவரும் போர் காரணமாக உயிரிழப்புகள் ஒரு பக்கமும் உணவுப்பொருட்களோ, நிவாரணப்பொருட்களோ இன்றி அப்பாவி மக்கள் மறுபுறமும் தவிக்கின்றனர். இன்னொரு புறம் போரினால் படுகாயம் அடைந்து ஏராளமான மக்கள் சிகிச்சை பெற வழியின்றி தத்தளிக்கின்றனர்.





இந்த நிலையில்தான் நியூயோர்க் நகரில் ஐ.நா. பாதுகாப்பு சபையில் ரஷ்யயாவின் ஆதரவுடன் 30 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு ஒரு மனதாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்தப் போர் நிறுத்தம், அங்கு உணவுப்பொருட்களும், நிவாரணப் பொருட்களும் சென்றடைவதற்கு வழி வகுக்கும். அது மட்டுமின்றி மருத்துவ சிகிச்சை தேவைப்படுவோர் வெளியேற உதவியாக அமையும்.

ஆனால் போர் நிறுத்தம் எப்போது அமுலுக்கு வரும் என கூறப்படவில்லை. இருப்பினும் தாமதமின்றி செயல்பாட்டுக்கு வர வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது.

போர் நிறுத்த தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேறிய நிலையில், கிழக்கு கூட்டாவில் ரஷ்யா ஆதரவுடன் சிரியா அதிபர் ஆதரவு படைகள் வான்தாக்குதல் நடத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நடிகை ஸ்ரீதேவி மரணம்: ஹொட்டல் அறையில் நடந்தது என்ன?

டுபாய், பெப். 27

நடிகை ஸ்ரீதேவி மரணித்தபோது, ஹொட்டல் அறையில் நடந்தது என்ன என்பது குறித்து டுபாய் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டுபாய் நகரில் உள்ள ஆர்.ஏ.கே. வால்டார்ப் ஆஸ்டோரியா நட்சத்திர ஹோட்டலில்தான் ஸ்ரீதேவியின் உறவினரின் திருமணம் நடந்தது. அந்த நிகழ்ச்சியில் ஸ்ரீதேவி தனது கணவர் மற்றும் இளைய மகள் குஷியுடன் கலந்து கொண்டார். அவரது மூத்த மகள் ஜான்வி கபூர், தனது முதல் படப்பிடிப்பில் இருந்ததால் அங்கு செல்லவில்லை. திருமணம் முடிந்ததும் போனி கபூரும் இளைய மகள் குஷியும் நாடு திரும்பினர். ஆனால் ஸ்ரீதேவி அங்கேயே தங்கியிருக்க முடிவு செய்தார்.

ஸ்ரீதேவிக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க நினைத்த போனி கபூர், ஸ்ரீதேவிக்குத் தெரிவிக்காமல் சனிக்கிழமை மீண்டும் டுபாய் திரும்பியுள்ளார். ஸ்ரீதேவியின் அறைக்குச் சென்ற போனி கபூர், அவருடன் 15 நிமிடங்கள் வரை பேசிக்கொண்டிருந்தார். பின்னர் இரவு விருந்துக்காக ஸ்ரீதேவியை அழைத்துள்ளார். குளியலறைக்குச் சென்ற ஸ்ரீதேவி வெகு நேரமாகியும் திரும்பவில்லை. அவர் கதவைத் திறக்காததால், கதவை உடைத்து போனி கபூர் உள்ளே சென்றபோது, அங்கு ஸ்ரீதேவி குளியல் தொட்டியில் பேச்சு மூச்சின்றி கிடந்துள்ளார். இதையடுத்து தனது நண்பர் ஒருவரை வரவழைத்து, இது தொடர்பாக வைத்தியர்கள் மற்றும் பொலிஸுக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்று ஸ்ரீதேவியை பரிசோதித்த வைத்தியர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் எனக் கூறியுள்ளனர். இதனையடுத்து டுபாய் நேரப்படி இரவு 11.30 மணிக்கு ஸ்ரீதேவி உயிரிழந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் ஹோட்டலில் உள்ள குளியலறையில் மயங்கி விழுந்ததால் அவரது உயிர் பிரிந்ததாக டுபாயிலுள்ள சில ஊடகங்கள் மூலம் ஒரு தகவல் பரவியது.

குறைந்த இரத்த அழுத்தத்தால் ஸ்ரீதேவி மயங்கி விழுந்தார். இதையடுத்துத்தான் அவரது உயிர் பிரிந்திருக்கலாம் என அந்தத் தகவலில் கூறப்பட்டது. உயிர் பிரிந்த நிலையில்தான் ஸ்ரீதேவியின் உடல் டுபாயில் உள்ள ரஷித் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. பிறகு அங்கிருந்து உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நேற்று மாலை வரை அவரது உடல் டுபாயில் இருந்து இந்தியா கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அம்பானிக்குச் சொந்தமான தனி விமானத்தில் ஸ்ரீதேவியின் உடலை மும்பை கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக தனி விமானம் நேற்றுமுன்தினம் பிற்பகலே டுபாய் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





## இங்கிலாந்தில் வெடி: நால்வர் காயம்

லெய்செஸ்டர், பெப். 27

இங்கிலாந்தில் நடந்த வெடிவிபத்தில் படுகாயமடைந்த 4 பேர் வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்தின் லண்டன் அருகே லெய்செஸ்டர் நகரில் அமைந்த கட்டடம் ஒன்றில் நேற்றுமுன்தினமிரவு 7 மணிக்கு மேல் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது.

வெடிவிபத்தைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு 6 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் ஒரு பேரிடர் பொறுப்புக் குழு ஆகியவை சென்றன. வெடிவிபத்தில் காயமடைந்த 4 பேர் உள்ளூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவத்துக்கு 3 மணி நேரத்துக்குப் பின் காவல்துறை தங்களது வலைத்தளத்தில் இது தீவிரவாதத்துடன் தொடர்புடையது இல்லை என தகவல் தெரிவித்துள்ளது.

செய்தி ஊடகங்கள் மற்றும் நபர்கள் இதற்கான காரணம் பற்றி ஊகத் தகவல்களை வெளியிட வேண்டாம் என்றும் பொலிஸ் கேட்டுக் கொண்டது. (ஐ)

# சச்சினைச் சந்தித்த பிரியா வாரியர்





கொச்சி, பெப். 27

கொச்சியில் நடந்த இந்தியன் சூப்பர் லீக் உதைபந்தாட்டப் போட்டியின் போது சச்சின் டெண்டுல்கரை 'கண்சிமிட்டல்' நடிகையான பிரியா வாரியர் சந்தித்துப் புகைப்படம் எடுத்துள்ளார்.

கண்சிமிட்டல் பாடல் மூலம் ஒரே நாளில் இந்தியா முழுவதும் பிரபலமானவர் பிரியா வாரியர். கடந்த சில,நாட்களாக இணையத் தளங்களில் பிரியாவாரியர் பற்றிய தகவல்களாகவே வந்து கொண்டு இருக்கின்றன.

இந்த நிலையில், கொச்சியில் நடந்த இந்தியன் சூப்பர் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் சென்னை அணியுடன் கேரளா பிளாஸ்டர்ஸ் அணி மோதியது. இந்தப் போட்டியில் கேரள அணியை உற்சாகப்படுத்துவதற்காக பிரியா வாரியரும், அவருடன் 'ஒரு அடார் லவ்' படத்தில் நடிக்கும் ரோஷனும் சென்றிருந்தனர்.

இந்த போட்டியைக் காண கிரிக்கெட் சாதனை வீரர் டெண்டுல்கரும் சென்றிருந்தார். அவரை விளையாட்டு மைதானத்தில் பிரியா வாரியர் சந்தித்தார். அப்போது கேரள அணியின் சின்னம் அடங்கிய ஆடையை டெண்டுல்கருக்கு வழங்கி மகிழ்ச்சி பொங்கப் புகைப்படம் எடுத்துக்கொண்டார். அப்போது ரோஷனும் அருகே இருந்தார். இந்தப் படம் இணையத் தளங்களில் வேகமாக பரவி வருகிறது. (ஐ)

# நாட்டை விட்டு தப்பி ஓடிய இம்ரானின் முன்னாள் மனைவி

இஸ்லாமாபாத், பெப். 27

பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரரான இம்ரான்கான் (வயது 65), தற்போது அங்கு தெக்ரீக்-இ-இன்சாப் கட்சியின் தலைவராக உள்ளார்.

இம்ரான்கான் முதலில் இங்கிலாந்தின் ஜெமிமா கோல்ட்ஸ்மித்தை 1995 ஆம் ஆண்டு திருமணம் செய்தார். 2 குழந்தைகள் பிறந்த நிலையில் அவரை 2004ஆம் ஆண்டு விவாகரத்துச் செய்தார்.

அதைத்தொடர்ந்து பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் ரேஹம்கானை 2015ஆம் ஆண்டு இம்ரான்கான் மறுமணம் செய்தார். ஆனால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அதே ஆண்டில் அவரை விவாகரத்துச் செய்தார்.



சமீபத்தில் தனது ஆன்மிக வழிகாட்டியான பஸ்ரா பிபி என்பவரை 3ஆவது திருமணம் செய்துகொண்டார்.

இந்த நிலையில், இம்ரான்கானின் 2ஆவது மனைவி ரேஹம்கானுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. அவரை மர்ம நபர்கள் தொலைபேசியில் அழைத்து, "இம்ரான்கானுக்கு எதிராகப் பேசினால் குண்டுவைத்துக் கொல்லப்படுவீர்கள்" என மிரட்டியுள்ளனர்.

இதனால் அவர் பாகிஸ்தானை விட்டு தனது உதவியாளருடன் வெளியேறிவிட்டார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இம்ரான்கான் 3ஆவது திருமணம் செய்துகொண்டுள்ள பஸ்ரா பிபியுடன் தனது திருமணத்தின்போதே தொடர்பில் இருந்ததாக இரண்டாவது மனைவியான ரேஹம்கான் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## பஞ்சாப்புக்கு தலைவரானார் அஸ்வின்

பஞ்சாப், பெப். 27

2018ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராக இந்திய சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். 11ஆவது தொடர் ஏப்ரல் 7ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கான வீரர்கள் ஏலம் கடந்த மாதம் 27ஆம் திகதி மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெற்றது. அக்சர் படேலை மட்டும் தக்கவைத்திருந்த கிங்ஸ் லெவன் பஞ்சாப், அஸ்வின், ஆரோன் பிஞ்ச், டேவிட் மில்லர், லோகேஷ் ராகுல், கருண் நாயர், மோகித் சர்மா, மனோஜ் திவாரி, யுவராஜ் சிங் போன்ற முக்கிய வீரர்களை ஏலத்தில் எடுத்தது. இவர்களில் யார் அணித்தலைவராக நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்புக் கிளம்பியது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி சார்பில், அந்த அணியின் ஆலோசகர் சேவாக் பேஸ்புக்கில் நேரடியாகக் (லைவ் சட்)கலந்து கொண்டு, அணித்தலைவர் யார் என்பதை தெரிவிப்பார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மீண்டும் 'லைவ் சட்'டின்போது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராக அஸ்வின் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்று சேவாக் அறிவித்தார். கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அஸ்வினை 7.6 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




## ஆர்சனலை வீழ்த்தி சம்பியனானது சிட்டி

விம்ப்ளே, பெப். 27

உதைபந்தாட்ட லீக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆர்செனலை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மான்செஸ்டர் சிட்டி சம்பியன் பட்டம் வென்றது.


உதைபந்தாட்ட லீக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் இரவு விம்ப்ளே மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மான்செஸ்டர் சிட்டி - ஆர்செனல் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இங்கிலீஷ் பிரிமீயர் லீக்கில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் மான்செஸ்டர் சிட்டி, இதில் ஆர்செனல் அணிக்கெதிராக சிறப்பாக விளையாடியது.

ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் செர்ஜியோ அகியூரோ முதல் கோலைப் பதிவு செய்தார். அதன்பின் இரு அணிகளும் முதல் பாதி நேரத்தில் கோல் அடிக்கவில்லை. இதனால் 1-0 என்ற கோல் கணக்கில் மான்செஸ்டர் சிட்டி முன்னிலை வகித்தது.

2ஆவது பாதி நேர ஆட்டத்திலும் மான்செஸ்டர் சிட்டி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. வின்சென்ட் கோம்பேனி 58ஆவது நிமிடத்திலும், டேவிட் சில்வா 65ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

இதனால் மான்செஸ்டர் சிட்டி 3-0 என வலுவான முன்னிலைப் பெற்றது. ஆர்செனல் வீரர்கள் ஒரு கோலாவது அடித்துவிடலாம் என்று போராடினார்கள். ஆனால் மான்செஸ்டர் சிட்டி அதற்கு வாய்ப்பே கொடுக்கவில்லை. இதனால் மான்செஸ்டர் சிட்டி 3-0 என வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. (ஐ)



## ஓயத் தயாராகும் தென்னாபிரிக்கப் புயல்

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளரான மோர்கல் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ளார்.

தென்னாபிரிக்க அணி அவுஸ்ரேலியாவுக்கு எதிராக அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்கும் மோர்னே மோர்கல், அந்தத் தொடர் முடிந்தவுடன் ஓய்வு பெறவுள்ளார்.

33 வயதான மோர்கல் 2006ஆம் உலகக் கிரிக்கெட்டில் அறிமுகமானவர். இவர் 83 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 294 விக்கெட்டுகளையும், 117 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 188 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய அதேவேளை, 44 இருபது-20 போட்டிகளில் விளையாடி 47 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். (ஐ)

## இரு பிரிவுகளில் சம்பியன்: வீரகத்திப் பிள்ளை ம.வி. அசத்தல்

நெல்லியடி, பெப். 27

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயது மற்றும் 18 வயதுப் பிரிவு ஆண்கள் கரப்பந்தாட்டங்களில் சம்பியன் பட்டங்களை வென்றது தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.

16 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் நேற்று நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இவ்விறுதியாட்டத்தில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் வல்வெட்டி இந்து தமிழ் வித்தியாலயமும் மோதின.

மூன்று சுற்றுகளைக் கொண்ட இவ்வாட்டத்தில் 25:22 25:12 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற சுற்றுக் கணக்கில் வென்று சம்பியனாகியது தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.

இதேவேளை நடைபெற்ற 18 வயது ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயமும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் மோதின.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் சுற்றை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி கைப்பற்ற, அடுத்த இரு சுற்றுக்களையும் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் வென்று 2:1 என்ற சுற்றுக் கணக்கில் வென்று சம்பியனாகியது. (ஐ-66)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 27.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.